இணைய தாக்குதல்களால் தேச பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல்

திரௌபதி முர்மு

புது தில்லி, அக்.1: தேசத்தின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ள இணைய (சைபர்) தாக்குதல்களை தடுத்து பாதுகாப்பான தேச கட்டமைப்பை உறுதிசெய்ய குடிமைப் பணி அதிகாரிகளும், ராணுவ அதிகாரிகளும் இணைந்து செயல்பட வேண்டும் என குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு செவ்வாய்க்கிழமை அறிவுறுத்தினார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் தேசிய பாதுகாப்பு கல்லூரியின் 64–ஆவது பிரிவு பயிற்றுநர்கள் மற்றும் பயிற்சி பெறும் அதிகாரிகள் மத்தியில் திரௌபதி முர்மு பேசியதாவது: இணைய தாக்குதல்களால் நாட்டின் ஒட்டுமொத்த நிர்வாக கட்டமைப்பும் பாதிக்கப்படுகிறது. இதை தடுத்து பாதுகாப்பான தேச கட்டமைப்பை உறுதிசெய்ய குடிமைப் பணி அதிகாரிகள் மற்றும் ராணுவப் படை இணைந்து செயல்பட வேண்டியது அவசியமாக உள்ளது.

குடியரசுத் தலைவர் மாளிகையில் தேசிய பாதுகாப்பு கல்லூரியின் 64–ஆவது பிரிவு பயிற்றுநர்கள், பயிற்சி பெறும் அதிகாரிகளை செவ்வாய்க்கிழமை சந்தித்த குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு.

பல்வேறு தரவுகள் மற்றும் முக்கிய தகவல்களைக் கொண்டுள்ள நிர்வாக நடைமுறைகள் பாதுகாப்பற்ற சூழலில் இருக்கக் கூடாது.

வருங்காலத்தில் எழும் பல்வேறு பிரச்னைகளைச் சமாளிக்க நவீனகால தொழில்நுட்பங்கள் குறித்து ராணுவத்தினர் தெரிந்து கொண்டு பிற துறை அதிகாரிகளுடன் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

இதை கருத்தில்கொண்டே தேசிய பாதுகாப்பு கல்லூரியின் பாடத்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த பயிற்சி பாதுகாப்புத்துறை அதிகாரிகள் சிறப்பாக பணியாற்ற வழிவகுக்கிறது.

சர்வதேச புவி அரசியல் சூழலில் வேகமாக பெரும் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. எனவே, இந்த சவால்களை எதிர்கொள்ள குடிமைப் பணி அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புப் படை அதிகாரிகள் தயாராக இருக்க வேண்டும் என்றார்.

தேசிய பாதுகாப்பு கல்லூரியில் தற்கால அரசியல், பொருளாதாரம் மற்றும் முக்கிய விவகாரங்கள் குறித்த பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

இதில் ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புப் படை அதிகாரிகள் உள்ளிட்டோருக்கு பயிற்சி வழங்கப்படுகிறது.

தெரியுமா சேதி...?

முதல்வர் ரேவந்த் ரெட்டி

எந்தவொரு பிரச்னையையும் வித்தியாசமாக அணுகுவதிலும், தீர்வு காண்பதிலும் பிரதமர் நரேந்திர மோடிக்கு நிகரானவர் என்று தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டியைக் குறிப்பிடுகிறார்கள். பாஜகவின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்த, தான் பதவி ஏற்பதற்கு முன்னால் கோ பூஜை நடத்தியதில் இருந்து, மற்ற முதல்வர்களை முந்திக் கொண்டு அமெரிக்காவில் முதலீட்டாளர்களை சந்திக்கச் சென்றது வரையில், மிகவும் சாதுர்யமாக அரசியல் சதுரங்க ஆட்டம் நடத்துபவர் என்று பாராட்டப்படுகிறார்.

தெலங்கானா மாநிலம் ஹைதராபாதில் திருநங்கைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்கிற விமர்சனம் கடந்த சில ஆண்டுகளாகவே இருந்து வருகிறது. 'தெருவெல்லாம் திருநங்கைகள்' என்று பிரபல நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். நாற்சந்திகளில் சிவப்பு விளக்குக்காக காத்திருக்கும் வாகனங்களைச் சுற்றி வந்து திருநங்கைகள் பணம் கேட்கிறார்கள் என்பதுதான் அவர்கள் குறித்த குற்றச்சாட்டு.

நவாபுகள், சுல்தான்கள் ஆட்சி செய்த பகுதிகளில் எல்லாம் அதிக அளவில் மூன்றாம் பாலினத்தவர்கள் காணப்படுகிறார்கள். அவர்களது ஆட்சிக் காலத்தில் 'ஹாரெம்' என்று அழைக்கப்படும் தங்களது டஜன் கணக்கிலான மனைவிமார்கள் தங்கி இருக்கும் அந்தப்புரத்தைக் காவல் காக்க மூன்றாம் பாலினத்தவரைத்தான் பணியமர்த்தினார்கள்.

மூன்றாம் பாலினத்தவருக்கான சமூக நீதியை வழங்க வேண்டும்; அதற்கு ஒரு வித்தியாசமான திட்டம் முதல்வர் ரேவந்த் ரெட்டியால் முன்மொழியப்பட்டிருக்கிறது. யார் மீது குற்றஞ்சாட்டப்படுகிறதோ அவர்களையே காவலர்களாக நியமித்துவிட்டால்... என்பதுதான் முதல்வரின் மூளையில் உதித்த தீர்வு.

கடந்த செப்டம்பர் 12–ஆம் தேதி முதல்வரிடமிருந்து அறிவிப்பு வந்தது. 'ஹோம் கார்ட்ஸ்' எனப்படும் ஊர்க் காவல் படையினர் போல, மூன்றாம் பாலினத்தவர்களின் படையை உருவாக்குவது என்பதுதான் அது. அவர்களுக்கு சீருடை வழங்கப்பட்டு, முறையான பயிற்சி அளிக்கப்பட இருக்கிறது. ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட தேதியில் பகுதிநேர ஊதியமும் வழங்கப்படும்.

அனைத்து நாற்சந்திகளிலும் போக்குவரத்தை முறைப்படுத்த திருநங்கைகளை பணியமர்த்துவதன் மூலம் அவர்களுக்கு வேலை தந்ததாகவும் இருக்கும்; வாகன ஓட்டிகளுக்கு தொந்தரவும் இருக்காது என்பதுதான் முதல்வர் ரேவந்த் ரெட்டியின் தீர்வு!.

–மீசை முனுசாமி

புகைப்படக் கண்காட்சி...

நடிகர் சிவாஜி கணேசனின் 97– ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை அடையாறில் உள்ள அவரது மணிமண்டபத்தில் திரைப்பயணம்– வாழ்க்கை வரலாற்றை விளக்கும் வகையில் அமைக்கப்பட்டிருந்த புகைப்படக் கண்காட்சியை செவ்வாய்க்கிழமை பார்வையிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், நடிகர் பிரபு.

உளுந்தூர்பேட்டையில் இன்று விசிக மது ஒழிப்பு மாநாடு

விழுப்புரம், அக். 1: கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணை அமைப்பான மகளிர் விடுதலை இயக்கம் சார்பில், மது, போதைப் பொருள் ஒழிப்பு மாநாடு புதன்கிழமை (அக். 2) நடைபெறவுள்ளது.

திருச்சி – சென்னை தேசிய நெடுஞ்சாலையில் உளுந்தூர்பேட்டை நகரப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள திடலில் புதன்கிழமை மாலை 4 மணிக்கு மாநாடு தொடங்குகிறது. விசிக தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி. தலைமை வகிக்கிறார்.

மாநாட்டில் திமுக அமைப்புச் செயலர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், மயிலாடுதுறை எம்.பி. ஆர். சுதா, இந்திய கம்யூனிஸ்ட் தேசிய மகளிரணிச் செயலர் ஆனி ராஜா, அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் தேசிய துணைத் தலைவர் உ.வாசுகி, மதிமுக துணை பொதுச் செயலர் மருத்துவர் ரொஹையா ஷேக் முகமது, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனிதநேய மக்கள் கட்சி, தமிழக வாழ்வுரிமைக் கட்சி உள்ளிட்ட கட்சிகளின் பிரதிநிதிகளும் பங்கேற்றுப் பேசுகின்றனர்.

மது, போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பாக தீர்மானங்களும் நிறைவேற்றப்படவுள்ளன.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பெண்கள் மாநாட்டில் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுவதால், அதற்குரிய ஏற்பாடுகளை விசிக மேற்கொண்டு வருகிறது. மாநாட்டுப் பகுதியில் சுமார் 50,000 நாற்காலிகள் போடப்பட்டுள்ளன.

விழுப்புரம் சரக டி.ஐ.ஜி. திஷா மிட்டல் தலைமையில், எஸ்.பி.க்கள் ரஜத் ஆர்.சதுர்வேதி (கள்ளக்குறிச்சி), வி.வி.சாய் பிரனீத் (செங்கல்பட்டு) மேற்பார்வையில், 11 ஏடிஎஸ்பிக்கள், 20 டிஎஸ்பிக்கள், 50 காவல் ஆய்வாளர்கள், 150 உதவி ஆய்வாளர்கள் உள்பட சுமார் 1,200 போலீஸார் மாநாட்டு பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

SOUTH INDIAN Bank
Experience Next Generation Banking

தி சௌத் இந்தியன் வங்கி லிட்., மதுரை பிராந்திய அலுவலகம்:
முதல் மாடி, YMCA பில்டிங், அல்பேரியா தேரோட்டம் எதிரில், 70 அடி ரோடு, எல்லீஸ் நகர், மதுரை, தமிழ்நாடு. Pin-625016. ro1015@sib.co.in, Ph: 0452 2300205

இ - ஏல விற்பனை அறிவிப்பு

Ref: RO/SAR/SN/89/2024-25 தேதி: 01.10.2024

நிதிச்சொத்துக்களின் பிணையம் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணையறுவ அமலாக்கச் சட்டம் 2002-ன் கீழ், பிணைய நல (அமலாக்க) விதிகள் 2002-ம் கூறப்பட்டுள்ள விதி 8(6) மற்றும் 9(1)-ன்படி அசையா சொத்துக்களுக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.

1) M/s. E.K.S. ஸ்பின்னர்ஸ் பிரைவேட் லிமிடெட். 2/120, அகுசல் பெட்டி எண்.7, ரெங்கநாதபுரம் தெரு, தளவாய்புரம், இராஜபாளையம், விருதுநகர், தமிழ்நாடு-626188.

2) திரு.K.S.ரமேஷ், வசிப்பிடம் எண். 598, காமராஜ் நகர், தளவாய்புரம், இராஜபாளையம், தமிழ்நாடு-626188.

3) திருமதி.R. அமுதா, வசிப்பிடம் எண். 598, காமராஜ் நகர், தளவாய்புரம், இராஜபாளையம், தமிழ்நாடு-626188.

4) திரு.K.S. அன்பழகன், வசிப்பிடம் எண்.36C, பாம்பாளம்மன் கோயில் தெரு, செட்டியார்பட்டி, அய்யன்கொல்லங் கொண்டான், இராஜபாளையம், தமிழ்நாடு-626122.

5) திருமதி.A.மீனா, வசிப்பிடம் எண்.36C, பாம்பாளம்மன் கோயில் தெரு, செட்டியார்பட்டி, அய்யன்கொல்லங் கொண்டான், இராஜபாளையம், தமிழ்நாடு-626122.

6) திரு.K.S.செந்தில்குமார், வசிப்பிடம் எண்.1/602, காமராஜ் நகர், தளவாய்புரம், இராஜபாளையம், தமிழ்நாடு-626188.

7) திருமதி.S.முத்துலட்சுமி, வசிப்பிடம் எண்.1/602, காமராஜ் நகர், தளவாய்புரம், இராஜபாளையம், தமிழ்நாடு-626188.

8) திரு.K.S.செல்வராஜ், வசிப்பிடம் எண்.1/656, காமராஜ் நகர், தளவாய்புரம், இராஜபாளையம், தமிழ்நாடு-626188.

9) திருமதி.S.வரலட்சுமி, வசிப்பிடம் எண்.1/656, காமராஜ் நகர், தளவாய்புரம், இராஜபாளையம், தமிழ்நாடு-626188.

தி சௌத் இந்தியன் வங்கி, இராஜபாளையம் கிளையில் (Secured Creditor) அடமானம் வைக்கப்பட்டு, தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட்டின் (Secured Creditor) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கொள்நிலை சுவாதீனம் செய்யப்படடிருக்கும் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை மேலே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்திரவாதி(கள்) ஆகியோர் 30.09.2024 தேதிப்படி தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட், இராஜபாளையம் கிளைக்கு (Secured Creditor) செலுத்த வேண்டிய தொகை ரூ.11,91,51,718.40-ஐ (ரூபாய் பதினொரு கோடியே தொன்னூற்றி ஒன்று லட்சத்து ஐம்பத்தொராயிரத்து எழுநூற்றி பதினெட்டு மற்றும் பைசா நாற்பது) பின்வட்டி மற்றும் செலவினங்களுடன் வசூலிக்கும் பொருட்டு "அது இருக்கும் இடத்திலேயே", "என்ன உள்ளதோ அப்படியே", "அது எந்த நிலையிலிருப்பினும்" என்ற அடிப்படையில் 28.10.2024 அன்று ஏல விற்பனை செய்யப்படும் என்று பொதுமக்களுக்கு குறிப்பாக கடன்தார் / உத்திரவாதிக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

சொத்தின் உரிமையாளர் பெயர்	ஷட்டம் எண் 1: திரு.K.S.ரமேஷ். ஷட்டம் எண் 2: M/s. E.K.S. ஸ்பின்னர்ஸ் பிரைவேட் லிமிடெட் ஷட்டம் எண் 3: திரு.K.S.ரமேஷ்.

சொத்து விபரம்:- ஷட்டம் எண். 1:- விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தாலுகா, செட்டியார்பட்டி கிராமத்திற்குட்பட்ட S.No. 331/1, துணைப்பிரிவின்படி தற்போது புதிய S.No. 331/1A, S.No.333/2, தற்போது புதிய S.No. 333/2A ஆகியவற்றில் அமைந்துள்ள 5567.50 சதுரடி இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், தளவாய்புரம் பஞ்சாயத்து, வார்டு எண்.2-ல், 3340.12 சதுரடி (தோராயமாக) அளவில் கதவு எண். 120, 120R, 120B8, 120B10 ஆகியவற்றைக் கொண்ட இண்டஸ்ட்ரியல் கட்டடத்துடன் அதன் பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதைய பயன்பாட்டு உரிமைகள் மற்றும் அத்துடன் தொடர்புடைய அனைத்தும் சேர்ந்து திரு.K.S.ரமேஷ்-க்கு சொந்தமான இந்த சொத்து. செய்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 30.11.2006 அன்று பதிவுபெற்ற பாகப்பத்திர எண்.2315/2006 & 30.05.2013 அன்று பதிவுபெற்ற நிரந்தப்பத்திர எண்.1526/2013 ஆகியவற்றில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கே: கிழக்கு மேற்கு பொது நடைபாதை, தெற்கே: K.S.செந்தில்குமாரின் பங்குக் கட்டடம், கிழக்கே: 2-வது அட்டவணை கட்டடம் மற்றும் வடக்கு தெற்கு பொதுச்சுவர், மேற்கே: வடக்கு தெற்கு தெரு.

ஷட்டம் எண். 2:- விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தாலுகா, அரசியார்பட்டி கிராமத்திற்குட்பட்ட, i) சர்வே எண்.51/3-ல் 101 சென்ட், ii) சர்வே எண்.51/2-ல் 86 சென்ட் மற்றும் சர்வே எண்.50/2-ல் கிணற்றின் 2/5வது வலது முதலியன iii) சர்வே எண்.53-ல் இருக்கும் 6.61 ஏக்கரில் தென்புறமுள்ள 6 சென்ட், iv) சர்வே எண்.52-ல் இருக்கும் 95 சென்ட் இடத்தில் வடக்கிலுள்ள 58 சென்ட் & v) சர்வே எண்.53-ல் இருக்கும் 6.61 ஏக்கரில் வடக்கிலுள்ள 142 சென்ட் என்ற அளவுகளில் அமைந்திருக்கும் 393 சென்ட் (i.e. 101+86+6+58+142 சென்ட்) இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், களங்கப்பேரி பஞ்சாயத்தில் 45137.70 சதுரடி (தோராயமாக) அளவில் கதவு எண்கள். 719, 918, 919, 920, 1334 ஆகியவற்றைக் கொண்ட இண்டஸ்ட்ரியல் கட்டடத்துடன் அதன் அனைத்து பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதைய பயன்பாட்டு உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்தும் சேர்ந்து M/s. EKS ஸ்பின்னர்ஸ் பிரைவேட் லிமிடெட்டுக்கு சொந்தமான இந்த சொத்து, கீழராஜகுலராமன் சார்பதிவாளர் அலுவலகத்தில் 17.11.1997 அன்று பதிவுபெற்ற விற்பனைப்பத்திர எண்.1246/1997 & 20.03.1995 அன்று பதிவுபெற்ற விற்பனைப்பத்திர எண்.291/1995 ஆகியவற்றில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள் பின்வருமாறு:

i) 101 சென்ட் சொத்தின் எல்லைகள்: வடக்கே: குருசாமி நாயக்கரின் ஈரநிலம் முதலியன, தெற்கே: M/s. EKS ஸ்பின்னர்ஸ் பிரைவேட் லிமிடெட்டுக்கு சொந்தமான நிலம், கிழக்கே: விற்பனைப் பத்திர எண்.1246/1997ல் உள்ள 2-வது அட்டவணை சொத்து, மேற்கே: ரோடு. ii) 86 சென்ட் சொத்தின் எல்லைகள்: வடக்கே: குருசாமி நாயக்கரின் ஈரநிலம் முதலியன மற்றும் குருவய்யா நாடாரின் வறண்ட நிலம், தெற்கே: M/s. EKS ஸ்பின்னர்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் கன்னியப்ப நாடாருக்கு சொந்தமான நிலம், கிழக்கே: குருவய்யா நாடாரின் வறண்ட நிலம், மேற்கே: விற்பனைப் பத்திர எண்.1246/1997-ல் உள்ள 1வது அட்டவணை சொத்து. iii) 6 சென்ட் சொத்தின் எல்லைகள்: வடக்கே: விற்பனைப் பத்திர எண்.1246/1997-ல் உள்ள 1-வது அட்டவணை சொத்து, தெற்கே: M/s. EKS ஸ்பின்னர்ஸ் பிரைவேட் லிமிடெட்டுக்கு சொந்தமான நிலம், கிழக்கே: விற்பனைப் பத்திர எண்.1246/1997-ல் உள்ள 1-வது அட்டவணை சொத்து, மேற்கே: ரோடு. iv) 58 சென்ட் சொத்தின் எல்லைகள்: வடக்கே: கிருஷ்ணமா ராஜாவின் நிலம், தெற்கே: கிருஷ்ணமா ராஜா, கணேசன் ராஜாவின் நிலம், கிழக்கே: விற்பனைப் பத்திர எண்.291/1995-ல் உள்ள 2-வது அட்டவணை சொத்து, மேற்கே: விற்பனைப் பத்திர எண்.291/1995-ல் உள்ள 2-வது அட்டவணை சொத்து. v) 142 சென்ட் சொத்தின் எல்லைகள்: வடக்கே: கிருஷ்ணமா ராஜாவின் நிலம், தெற்கே: கிருஷ்ணமா ராஜா, கணேசன் ராஜாவின் நிலம், கிழக்கே: கன்னியப்ப நாடார் மற்றும் பிறருடைய நிலம், மேற்கே: மங்கம்மாள் சாலை.

ஷட்டம் எண். 3:- விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தாலுகா, செட்டியார்பட்டி கிராமத்திற்குட்பட்ட, S.No. 331/1, துணைப்பிரிவின்படி தற்போது புதிய S.No. 331/1A, S.No.333/2, தற்போது புதிய S.No. 333/2A, சர்வே எண். 332/1, தற்போது புதிய S.No. 332/1P ஆகியவற்றில் அமைந்துள்ள 4640 சதுரடி இடத்தின் அனைத்து பகுதிகளுடன், தளவாய்புரம் பஞ்சாயத்து, வார்டு எண்.2-ல், 2156.01 சதுரடி (தோராயமாக) அளவில் கதவு எண். 120B-ஐ கொண்ட குடியிருப்புக் கட்டடத்துடன் அதன் பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதைய பயன்பாட்டு உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்தும் சேர்ந்து திரு.K.S.ரமேஷ்-க்கு சொந்தமான இந்த சொத்து, செய்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 30.11.2006 அன்று பதிவுபெற்ற பாகப்பத்திர எண்.2315/2006 & 30.05.2013 அன்று பதிவுபெற்ற நிரந்தப்பத்திர எண்.1526/2013 ஆகியவற்றில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கே: கிழக்கு மேற்கு பொது நடைபாதை, தெற்கே: ராமசுந்தரநாடார் கிழக்கு மேற்கு தெரு, கிழக்கே: பொது நடைபாதை, மேற்கே: 1-வது அட்டவணை வடக்கு தெற்கு பொதுச்சுவர்.

நிர்ணயிக்கப்பட்ட தொகை	ஷட்டம் எண். 1:- ரூ.91,39,000/- (ரூபாய் தொன்னூற்றி ஒன்று லட்சத்து முப்பத்தொன்பதாயிரம் மட்டும்). ஷட்டம் எண்.2:- ரூ.4,54,27,000/- (ரூபாய் நான்கு கோடியே ஐம்பத்து நான்கு லட்சத்து இருபத்தேழாயிரம் மட்டும்). ஷட்டம் எண்.3:- ரூ.96,97,000/- (ரூபாய் தொன்னூற்றி ஆறு லட்சத்து தொன்னூற்றி ஏழாயிரம் மட்டும்).
முன் வைப்புத் தொகை (EMD)	ஷட்டம் எண். 1:- ரூ.9,13,900/- (ரூபாய் ஒன்பது லட்சத்து பதிமூன்றாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்). ஷட்டம் எண்.2:- ரூ.45,42,700/- (ரூபாய் நாற்பத்தைந்து லட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து எழுநூறு மட்டும்). ஷட்டம் எண்.3:- ரூ.9,69,700/- (ரூபாய் ஒன்பது லட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து எழுநூறு மட்டும்).
ஏல அதிகரிப்புத் தொகை	ரூ.50,000/-
இ-ஏல நேரம் மற்றும் தேதி	28.10.2024 அன்று 02.00 PM முதல் 03.00 PM வரை (விற்பனை முடியும் வரை 5 நிமிட வரம்பற்ற தன்நீட்சியுடன்)
வங்கிக்கு தெரிந்த வில்லங்கங்கள்	(ஷட்டம் எண் 1 -க்காக) 01.01.1987 முதல் 01.12.2022 வரை வில்லங்கங்கள் ஏதுமில்லை. (ஷட்டம் எண் 2 -க்காக) 01.11.2019 முதல் 08.05.2023 வரை வில்லங்கங்கள் ஏதுமில்லை. (ஷட்டம் எண் 3 -க்காக) 01.01.2019 முதல் 01.05.2024 வரை வில்லங்கங்கள் ஏதுமில்லை.

விற்பனை பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தி சௌத் இந்தியன் வங்கி லிட்.(Secured Creditor)-ன் இணையதளம் அதாவது www.southindianbank.com-ல் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை பார்க்கவும். https://bankauctions.in என்ற இணையதளத்திலும் விபரங்களை அறியலாம்.

சொத்து ஆய்வு, இ-ஏல நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் அல்லது ஏலங்களை சமர்ப்பித்தல் ஆகியவை பற்றி மேலும் விபரமாக அறிவதற்கு, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியையோ (Mobile No. 9894647220) அல்லது தி சௌத் இந்தியன் வங்கி லிட். இராஜபாளையம் கிளையின் மொபைல் எண் 8075045551-ல் வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

இடம்: மதுரை அங்கீகாரம் பெற்ற அலுவலர்

அமலாக்கத் துறையின் அத்துமீறல்களை எதிர்க்காதது ஏன்?

ராமதாஸுக்கு திமுக கேள்வி

சென்னை, அக். 1: அமலாக்கத் துறையின் அத்துமீறல்களை எதிர்க்காதது ஏன் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ராமதாஸுக்கு திமுக கேள்வி எழுப்பியது.

அமைச்சர் செந்தில் பாலாஜி குறித்து ராமதாஸ் தெரிவித்த கருத்துகளுக்குப் பதிலளித்து திமுக அமைப்புச் செயலர் ஆர்.எஸ். பாரதி செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கை:

அமைச்சர் செந்தில் பாலாஜி தியாகம் செய்துவிட்டு சிறை செல்லவில்லைதான். ஆனால், பொய் வழக்குகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட பண முறைகேடு வழக்கில், மத்திய அரசின் எதேச்சதிகார போக்கால் அவர் கைது செய்யப்பட்டார். அவருக்கு அமுத்தம் தந்து துன்புறுத்தி வாக்குமூலம் பெற்று, திமுகவின் மீது மேலும் பொய் வழக்குகள் போடலாம் என்ற கனவு பொய்யாக்கப்பட்டது. அதற்காக 471 நாள்கள் சிறையில் இருந்தார்.

முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் செந்தில் பாலாஜியின் ஜாமீன் மனுமீதான விசாரணையின்போது, 'அமலாக்கத் துறையினர் செந்தில் பாலாஜியிடம் ஏன் நீங்கள் பாஜகவில் சேரக் கூடாது?' எனக் கேட்டதாக அதிர்ச்சித் தகவலை செந்தில் பாலாஜி தரப்பு வழக்குரைஞர் கூறினார். பாஜகவில் அவரைச் சேர்த்து திமுகவுக்கு எதிராகக் களமாட நினைத்தார்கள்.

அதற்கு அடிபணியாமல், அஞ்சாமல் நின்ற உறுதிதான் தியாகம். அது நல்லெண்ணம் கொண்டோருக்கு மட்டுமே புரியும். பாஜக நிழலில் இருக்கும் தைலாபுரத்தில் இருப்பவர்களுக்கு எத்தனை விளக்கம் அளித்தாலும் புரியாது.

அமலாக்கத் துறையை பாஜகவுக்கு ஆள் சேர்க்கும் துறையாக நரேந்திர மோடி அரசு பயன்படுத்தும் சூழலில், ஆட்சியில் இருந்துகொண்டே அதைத் தீரத்தோடு எதிர்த்து திமுக அரசு களமாடிக் கொண்டிருக்கிறது.

ஆனால், எதிர்க்கட்சியாக இருக்கும் பாமகவோ, அமலாக்கத் துறையின் அத்துமீறல்களை ஏன் எதிர்க்கவில்லை என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இண்டியன் பேங்க் Indian Bank
அலகாபாத் ALLAHABAD

சிவகங்கை கிளை

பிற்சேர்க்கை IV-A (பார்க்க – விதி 8(6) க்கான விதி விலக்கு)
அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

பிணைச்சொத்து பாதுகாப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் 2002 - உடன் படிக்க - பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) க்கான விதி விலக்கு ஆகியவற்றின் கீழ் அசையாச்சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் / கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்டு, **இந்தியன் வங்கி, மண்டல அலுவலகம், காரைக்குடி கிளை** என்ற ஜாமீன் பெற்று கடனளித்தவரின் அதிகாரப்பூர்வ அலுவலரால் **இயற்கவாதீனம்** (எது பொருந்துமோ அது) எடுக்கப்பட்ட இதன் கீழ் விவரிக்கப்பட்ட அசையாச்சொத்து ஜாமீன் பெற்று கடனளித்த **இந்தியன் வங்கி, சிவகங்கை கிளைக்கு 26.09.2024** ம் தேதியின் படி நிலுவையாக உள்ள **ரூ. 27,90,904/- (ரூபாய். இருபத்து ஏழு இலட்சத்து தொண்ணூறாயிரத்து தொள்ளாயிரத்து நான்கு மட்டும்) மற்றும் 27.09.2024** முதல் மேற்கொண்டு வரும் வட்டி, செலவுகள், இதர கட்டணங்கள் மற்றும் செலவுகள் உள்ளிட்ட தொகையை கடன்தாரர் / ஜாமீதாரர் பெயர் மற்றும் முகவரி - 1) **திரு. S குமார், (கடன்தாரர் / அடமானதாரர்) த/பெ. சண்முகம்,** எண். 1-127-1, கலகண்மாய் கிராமம், மதுகண்மாய், காளையார்கோவில், சிவகங்கை மாவட்டம் - 630 551 மற்றும் 2) **திரு. பூமிநாதன், (ஜாமீன்தாரர்) த/பெ.திரு வேலுசாமி,** எண். 424, ஒட்டணம், மதுகண்மாய், காளையாரோக்வில், சிவகங்கை மாவட்டம் - 630 551. 3) **திரு R தமிழரசன் (ஜாமீன்தாரர்) த/பெ திரு ராமசாமி,** எண். 2/683, சிலையாஊரணி, காலகண்மாய் அஞ்சல், செவஊரனி, காளையார்கோவில், சிவகங்கை மாவட்டம் - 630 551 ஆகியோரிடமிருந்து வசூலிப்பதற்காக **"இருக்கின்ற இடத்தில்", "இருக்கின்ற நிலையில்" மற்றும் "இருக்கின்றவற்றுடன்"** என்ற அடிப்படையில் **18.10.2024** ம் தேதியன்று விற்பனை செய்யப்படும்.

மின்னணு ஏலம் மூலம் விற்பனைக்கு உத்தேசிக்கப்பட்டு கொண்டுவரப்பட்டுள்ள சொத்தின் விபரங்கள் இதன் கீழ் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

சொத்துக்களின் அட்டவணை விவரங்கள்:	சிவகங்கை மாவட்டம், சிவகங்கை பதிவு மாவட்டம், காளையார்கோவில் சார்பதிவு மாவட்டம், சிவகங்கை தாலுக்கா, தற்போதைய காளையார்கோவில் தாலுக்கா, சோமநாதமங்கலம் குழுமம், காளையார்கோவில் பகுதி, மேட்டுபட்டி கிராமம், கிருஷ்ணா நகர், சர்வே எண். 24/5A1A-பகுதியில் அமையப்பெற்ற 2150 சதுர அடி பரப்பளவுடன் திரு S குமார், த/பெ திரு சண்முகம் என்பவருக்கு சொந்தமான சொத்து. **எல்லைகளாவன** - வடக்கு - 15 அடி அகல கிழமேல் பொது பாதை, கிழக்கு - பிளாட் எண். 25, தெற்கு - பிளாட் எண்கள். 29 மற்றும் 30, மேற்கு - பிளாட் எண். 23. அளவீடுகளாவன - கிழமேல் வடக்கு புறம் மற்றும் தெற்கு புறம் - 50 அடி., தென்வடல் கிழக்கு புறம் மற்றும் மேற்கு புறம் - 43 அடி., மொத்த பரப்பு 2150 சதுர அடி.
சொத்தின் மீதான வில்லங்கங்கள்	ஏதுமில்லை
குறைந்தபட்ச விலை	**ரூ. 18,27,500/- (ரூபாய். பதினெட்டு இலட்சத்து இருபத்து ஏழாயிரத்து ஐனூறு மட்டும்)**
டேவணித்தொகை (EMD)	ரூ. 1,83,000/- (ரூபாய். ஒரு இலட்சத்து எண்பத்து மூன்றாயிரம் மட்டும்)
ஏல உயர்வுத் தொகை	ரூ. 10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)
E-ஏல நாள் மற்றும் நேரம்	18.10.2024 காலை 11.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை
சொத்தின் அடையாள எண்	IDIB6575579974

ஏலதாரர்கள், ஆன்லைன் விலைகோரலில் பங்கேற்க, எமது மின்னணு ஏல சேவைதாரர் PSB alliance Pvt Ltd - ன் வலைதளம் (https://www.ebkray.in)யை பார்வையிட அறிவுறுத்தப்படுகிறார்கள். தொழ